# 28-05-2024 செய்தி

## கடற்பசுக்களைக் காப்போம்

**வாழ்விடம் கடற்பசு**

- நிலத்தில் காணப்படும் பசுக்களை போன்ற முகத்தோற்றத்துடன் கடல்வாழ் தாவரங்களை, குறிப்பாக கடற்புற்களை உணவாக உண்டு வாழ்வதால் இவ்வுயிர்களுக்கு கடற்பசு என்னும் பெயர் ஏற்பட்டது.
- ஆங்கிலத்தில் இவை டுகாங் என்று அறியப்படுகிறது. கடற்பசு, ஆவுளி, ஆவுளியா என்று வேறு பெயர்களுடன் அழைக்கப்படும் இவ்விலங்கானது அந்தமான் நிக்கோபரின் மாநில விலங்காக உள்ளது.
- கடற்புற்கள் நிறைந்த பகுதி, கடல் நீரோட்டங்களால் உருவான அலையாத்தி காடுகளின் ஆழமற்ற நீர்ப்பகுதி, தீவுகளை ஒட்டிய பகுதிகள் போன்ற பல்வேறு பகுதிகளை தங்களின் வாழ்விடமாக கொண்டுள்ளன.
- கடலில் வாழும் பாலூட்டி வகை விலங்குகளில் தனத்திருப்பதும், எண்ணிக்கையில் அருகிவருவதும் கடற்பசுக்கள் மட்டுமே.
- வெப்ப மண்டல இந்தோ-பசிபிக் பகுதிகளில் அமைந்துள்ள ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், மடகாஸ்கர், இலங்கை, இந்தியா போன்ற 30-க்கும் அதிகமான நாடுகளின் குறிப்பிட்ட கடல் பகுதிகளில் கடற்பசுக்கள் காணப்படுகின்றன.
- இந்தியாவைப் பொறுத்தமட்டில், முந்தைய காலகட்டத்தில் பரவலாக அனைத்து கடற்கரைப் பகுதிகளிலும் காணப்பட்ட இவ்வுயிர்கள் இன்று பாக் நீரிணை, கட்ச் வளைகுடா, மன்னார் வளைகுடா, அந்தமான் நிக்கோபர் தீவுகள் போன்ற குறிப்பிட்ட பகுதிகளின் கடற்பரப்புகளில் மட்டும் காணப்படுகின்றன.
- உலகிலேயே அதிக அளவிலான கடற்பசுக்களின் எண்ணிக்கை ஆஸ்திரேலிய கடற்கரைப் பகுதிகளில், குறிப்பாக தி கிரேட் பேரியர் என்னும் பவளப்பாளை அமைந்துள்ள கடற்பகுதிகளில் காணப்படுகின்றன.
- கடற்பசு குறைந்த கண்பார்வை உடையதால் ஒலி எழுப்புதல் மற்றும் தொடுதல் உணர்வுகள் மூலம் தங்களுக்குள் செய்திகளை பரிமாறிக் கொள்கிறது. மெதுவாக நீந்தும் தன்மை உடையது.
- நன்கு வளர்ந்த கடற்பசு சுமார் 3-4 மீ நீளமும், 350-400 கிலோ எடையும் கொண்டது.
- நாள் ஒன்றுக்கு சுமார் 40-50 கிலோ அளவுக்கு கடற்புற்களை உணவாக எடுத்துக்கொள்ளும்.
- மணிக்கு 10-15 கி.மீ வேகத்தில் நீந்தும் திறன் கொண்டது. பொதுவாக கடற்பசுக்கள் கடலின் மேற்பரப்பிலே நீந்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- தமிழகத்தில் கடற்பசுக்கள் மற்றும் அதன் வாழ்விடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, நாட்டிலேயே முதன் முறையாக பாக் நீரிணையில் சுமார் 448 சதுர கி.மீ. பரப்பளவில் கடற்பசு பாதுகாப்பகம் அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## நடமாடும் இ-சேவை கேந்திரா கேரளாவில் முதன்முறையாக அறிமுகம்

- நீதிமன்றம், தொடர்பான மக்களின் சேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், கணினி வசதிகளுடன் கூடிய நடமாடும் இ-சேவை கேந்திரா என்ற சேவை மையம், நாட்டிலேயே முதன்முறையாக கேரளாவில் துவக்கப்பட்டது.

**எளியமுறை**

- நாட்டில் உள்ள அனைத்து உயர் நீதிமன்றங்கள், மாநிலத்தில் ஏதாவது ஒரு மாவட்ட நீதிமன்றம் ஆகிய இடங்களில் பரீட்சார்த்த முறையில் நடமாடும் இ-சேவை கேந்திரா துவங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.
- நடமாடும் நீதிமன்றங்கள் ஏற்கனவே இருக்கும் நிலையில், நீதிமன்றம் தொடர்பான அனைத்து உதவி மற்றும் சேவைகளை ஓரிடத்தில் பெறும் வகையில், கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் நடமாடும் இ-சேவை கேந்திரா வாகனத்தின் பயன்பாடு சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

**பதிவேற்றம்**

- வழக்கு தொடுப்பவர்கள் மின்னஞ்சல் வாயிலாக வழக்கை பதிவு செய்யவும் ஏற்கனவே நிலுவையில் உள்ள வழக்கு விபரங்களை வழக்கறிஞர்கள் தெரிந்து கொள்ளவும், நடமாடும் இ-சேவா மையம் உதவியாக இருக்கும்.
- வழக்கறியஞர்கள் வழக்கின் தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகளின் நகல்களைப் பெறுவதற்கும் இந்த நடமாடும் இ-சேவா மையம் உதவுகிறது.
- வழக்கின் நிலை, அடுத்த விசாரணைக்கான தேதி குறித்தும் இதன் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.
- வழக்கு தொடர்பான மனுக்களில் இ- கையொப்பங்களை இணைத்தல், பதிவேற்றம் செய்தல், தாக்கல் எண் வழங்குதல் போன்ற சேவைகளும் இதில் அடங்கும்.